டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.09.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 079 | Madurai | Online Edition

# கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தில் சிட்டிலிங்கி பள்ளத்தாக்குப் பகுதி பழங்குடியின கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி



கோயம்புத்தூர், செப்.21

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மற்றும் சித்தேரி மலைகளுக்கு இடையே அமைந்துள்ள சிட்டிலிங்கி பள்ளத்தாக்குப் பகுதியின் பழங்குடியின கிராமங்களைச் சேர்ந்த கரும்பு விவசாயி களுக்காக, கோயம்புத்தூரில் உள்ள கரும்பு இனப்பெருக்க நிறுவனம் (ICAR-SBI), 'பழங்குடியின விவசாயிகளுக்கான மேம்படுத்தப்பட்ட கரும்பு தொழில்நுட்பங்கள் (Training programme on "Improved Sugarcane Technologies for Tribal Farmers (TISTT)")' என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிற்சித் திட்டத்தை நடத்தியது. செப்டம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் இந்த நிறுவன வளாகத்தில் நடைபெற்ற இப்பயிற்சித் திட்ட மானது, பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்தின்' (Development Action Plan for Scheduled Tribe Component - DAPSTC) கீழ் செயல்படுத்தப்பட்டது.

முதற்கட்ட பயிற்சி முகாமினை துவக்கி வைத்து உரையாற்றிய கரும்பு இனப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குநர் கோவிந்தராஜ், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் கரும்புத் துறை எதிர்கொள்ளும் சவால்களைச் சுட்டிக்காட்டினார். 2011-ல் 7,000 எக்டேருக்கும் அதிகமாக இருந்த தர்மபுரி மாவட்டத்தின் கரும்பு சாகுபடி பரப்பு, தற்போது வெகுவாகக் குறைந்துள்ளதை அவர் குறிப்பிட்டார். புதிய மற்றும் அதிக மகசூல் தரும் ரகங் களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய

அவர், புதிதாகத் தோன்றும் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த அறிவியல் பூர்வமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும், இதன் மூலம் கரும்பு சாகுபடியை அதிக லாபம் தரக்கூடியதாக மாறும் என விவசாயிகளை ஊக்குவித்தார்.

நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானியும், DAPSTC திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளருமான புத்திர பிரதாப், மாநிலத்தில், கரும்பு சாகுபடியில் பழங்குடியினரின் பங்களிப்பு மிகக் குறைவாகவே உள்ளதாகத் தெரிவித்தார். தர்மபுரி பகுதியில் வறட்சி மேலாண்மை, வெள்ளை வேர்ப்புழு மேலாண்மை மற்றும் கரும்பு சாகுபடியில் இயந்திரமய மாக்கலை ஊக்குவித்தல் உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இப்பயிற்சித் திட்டம் வடிவமைக் கப்பட்டுள்ளதாக தெரிவித்தார் .

இந்நிகழ்ச்சியின் போது, புதிதாக வெளியிடப்பட்ட அதிக மகசூல் தரும் 'Co 21003' என்ற கரும்பு ரகத்தின் விதைக்கணைகள், அவற்றை பெருக்கி விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. நிறைவாக, முதுநிலை விஞ்ஞானி கோபி நன்றியுரை ஆற்றினார்




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## மசாலா பொடிகள்/ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி

கோயம்புத்தூர், செப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி 23.09.26 மற்றும் 24.09.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

- மசாலா பொடிகள்
- தயார் நிலை பேஸ்ட்
- காளான் ஊறுகாய்
- வாழைப்பூ ஊறுகாய்
- பாகற்காய் ஊறுகாய்
- கத்தரிக்காய் ஊறுகாய்
- வெங்காய ஊறுகாய்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**44. செலரி சூப்**

**தேவையான பொருட்கள்**

செலரி — 1 கப்

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

செலரியை வேக வைத்து அரைத்து வெண்ணெயில் வதக்கிய வெங்காயத்துடன் சேர்த்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# விதையின் ஈரப்பதம் அறிந்து விதைகளை சேமிக்கலாம்!

கரூர், செப்.21

'வித்தே விளைவின் ஆதாரம்' வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் விதைகளின் பங்கு இன்றியமையாதது. விதையின் ஈரப்பதம் என்பது விதை சேமித்துள்ள நீரின் அளவாகும். தரமான விதை, விளைச்சலில் 15% உயர வழிவகுக்கிறது. தமிழகத்தில் விதைக்கான உற்பத்தி ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை.

எனவே அறுவடைக் காலத்தில் விதைகளை தகுந்த முறையில் சுத்திகரிப்பு செய்து சேமித்து வைக்க வேண்டும். விதையின் ஈரப்பதமானது சதவீதத்தில் குறிப்பிடப்படுகிறது. விதையின் ஈரப்பதமானது அதன் முளைப்புத்திறன் பூச்சித்தாக்குதல், நோய் தாக்குதல், விதை அழுகுதல் மற்றும் அவ்விதையின் அதிகபட்ச சேமிப்புக் காலம் ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது. விதையின் ஈரப்பதம் மிக அதிகமாக இருப்பதாலும், மிக குறை வாக இருப்பதாலும் விதையின் முளைப்புத்திறன் சேமிப்புக் கால அளவு பூச்சி மற்றும் நோய் தாக்குதல் போன்ற பாதிப்புகளை உருவாக்குகிறது.

விதையின் ஈரப்பதம் அதிகரிப்பதாலோ, குறைவதாலோ விதைத் தரத்தை முடிவு செய்யும் முக்கிய காரணியான விதை முளைப்புத்திறன் குறையும்.

எனவே, விதையின் ஈரப்பதத்தை இந்திய குறைந்தபட்ச விதை அளவீடு பரிந்துரைக்கப்பட்ட (Indian Minimum Standard for Seeds) அளவில் சேமித்து வைக்க வேண்டும். விதைகள் அதிக முளைப்புத்திறனுடன் இருக்கவும், உரிய காலம் வரை சேமிக்கவும் நெல் -13%, சோயாபீன்ஸ், சிறுதானியங்கள் பப்பாளி-12%, பருத்தி 10% பயறு வகைகள், நிலக்கடலை, சூரியகாந்தி, எள், கொத்தவரை, பீட்ரூட், பாலக்கீரை-9%, முருங்கை, புளிச்சை, வெங்காயம், கத்திரி, மிளகாய், தக்காளி-8% மற்றும் காலிப்பிளவர், முட்டைக்கோஸ், நூல்கோல் சுரை, பாகல், புடல், பீர்க்கு, பூசணி, பரங்கி, தர்பூசணி, வெள்ளரி -7% பரிந்துரைக்கப்பட்ட ஈரப்பத அளவுகள் இருக்குமாறு சேமித்து விவசாயிகள் பயன் பெறலாம்.

எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெற்று, அதிக லாபம் பெறவும் விதை இடுபொருள் செலவினைக் குறைக்கவும்,தங்களிடம் உள்ள விதைகளை விதை மாதிரி ஒன்றுக்கு ரூ 80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி கரூர் – காந்தி கிராமம், திண்ணப்பா நகர் முதல் தெருவிலுள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து, விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறு கரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் க.ரமேஷ்குமார் கேட்டுக்கொள்கிறார்.

# மதுரை வேளாண் அறிவியல் நிலையத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி துவக்கம்




மதுரை, செப்.21

மதுரை வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆறு நாட்கள் தேனீ வளர்ப்பு பயிற்சி 21.09.2026 முதல் 26.09.2026 வரை நடைபெறுகிறது. இப்பயிற்சியினை மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சீனிவாசன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்.

அவர் தனது துவக்க உரையில் தேனீக்களின் வகைகள், தேன் சேகரிக்கும் முறைகள்’ மற்றும் தேனீக்களின் பண்புகள் குறித்து விளக்கம் அளித்தார். மேலும் தேனீ வளர்ப்பு ஒரு லாபகரமான உப தொழிலாக விவசாயிகளுக்கு விளங்கும் என எடுத்துரைத்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

முனைவர் கி.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் பயிற்சியின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் விவசாயத்தில் தேனீ வளர்ப்பின் பங்கு குறித்தும் விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் தேனீக்களின் வகைகள் தேனீ வளர்ப்பு முறைகள், தேனீக்களை தாக்கும் பூச்சி நோய்கள், தேன் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல் முதலிய வகுப்புகள் நடைபெற உள்ளன.

முனைவர் கு.செல்வராணி, தொழில்நுட்ப வல்லுநர் வேளாண் விரிவாக்கம் நன்றியுரை வழங்கினார்.



# இயந்திர நெல் நடவு செயல்விளக்க திடல் வேளாண்மை துணை இயக்குனர் ஆய்வு

புதுக்கோட்டை, செப்.21

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், வேளாண்மை துறை 2026-27ம் ஆண்டு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் நெல் திட்டத்தின் கீழ் புதூர் கிராமத்தில் இயந்திர நடவு செயல்விளக்கம் அமைக்கும் அடைக்கலம் என்ற விவசாயின் வயலில் இயந்திர நெல் சாகுபடி நடவு செய்யும் வயலை புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம் செல்வி ஆய்வு செய்து, இயந்திர நடவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து உர, நீர் மேலாண்மைகள், களை மேலாண்மையில் கோனோ வீடர் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார்.



ஆய்வின் போது போது அன்னவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மதியழகன், அன்னவாசல் வட்டார வேளாண்மை அலுவலர் கௌசல்யா, உதவி வேளாண்மை அலுவலர் ஐஸ்வர்யா ஆகியோர் உடன் இருந்தனர்.



# மக்காச்சோளம் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



ஈரோடு, செப்.21

ஈரோடு மாவட்டம், பருவாச்சியில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) சார்பில் மக்காச்சோளம் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு பவானி வேளாண்மை உதவி இயக்குநர் ம.கனிமொழி, தலைமை வகித்தார். அவர் மக்காச்சோளம் சாகுபடியில் பயிர் மேலாண்மையின் முக்கியத்துவம், தரமான மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். முருகேசன், வேளாண்மை அலுவலர் உயிர் உரங்கள் பயன்பாடு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றி விரிவாக கூறினார்.

குமரகுரு வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் பாஸ்கர் சிறப்புரையாற்றி, மக்காச்சோளம் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகள், நிலம் தயாரித்தல், தரமான விதைத் தேர்வு, விதை நேர்த்தி, உர மேலாண்மை, களை மேலாண்மை, நீர் மேலாண்மை மற்றும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை விளக்கினார். மேலும், உதவி வேளாண்மை அலுவலர் சுரேசுகுமார், வேளாண்மைத் துறையின் பல்வேறு மானியத் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் அரசு உதவிகள் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில் தொழில்நுட்ப மேலாளர் கங்கா வரவேற்புரை வழங்கினார். பயிற்சிக்கான முன் ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஷ்குமார் மற்றும் பூங்கோதை மேற்கொண்டனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகளைப் பின்பற்றி, அதிக மகசூல் மற்றும் தரமான விளைபொருள் பெறுவதற்கான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

# வேளாண் விரிவாக்க மையத்தில் போதிய அளவு விதைகள் இருப்புள்ளதாக உதவி இயக்குனர் தகவல்




சேலம், செப்.21

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளின் தேவைக்காகப் போதிய அளவில் தரமான விதைகள் மற்றும் இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகத் தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

தற்போது சம்பா மற்றும் பிற பட்டங்களுக்குத் தேவையான முக்கிய நெல் ரகங்களான ADT 57 (300 கிலோ), கோ 55 (7,930 கிலோ), ADT 45 (5,300 கிலோ), வெள்ளைப் பொன்னி (1,470 கிலோ) மற்றும் கோ 56 (200 கிலோ) ஆகிய நெல் விதைகள் தயார் நிலையில் உள்ளன. மேலும், சிறுதானிய மற்றும் இதர பயிர் ரகங்களான குதிரைவாலி (245 கிலோ), சோளம் CSV 43 (2,797 கிலோ), உளுந்து வம்பன் 10, 11 (8,150 கிலோ), துவரை TDRG 59 (110 கிலோ), நிலக்கடலை கிர்னார் 5 (Girnar 5 - 650 கிலோ) மற்றும் மக்காச்சோளம் அட்வாண்டா 752 (ADVANTA 752 - 3,000 கிலோ) ஆகிய விதைகளும் தட்டுப்பாடின்றி கிடைக்கின்றன.

இவற்றுடன் பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான சிறு தானிய நுண்ணூட்டம், நிலக்கடலை நுண்ணூட்டம், பயறுவகை நுண்ணூட்டம் மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரிலம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஸ் பாக்டீரியா ஆகிய முக்கிய இடுபொருட்களும் போதிய அளவில் இருப்பு வைக்கப் பட்டுள்ளன. எனவே, தேவைப்படும் இப்பகுதி விவசாயிகள் தங்களது ஆதார் அட்டை நகல் மற்றும் கணினி சிட்டா ஆகிய ஆவணங்களுடன் அருகில் உள்ள தலைவாசல் வேளாண் விரிவாக்க மையம் அல்லது வீரகனூர் துணை வேளாண் விரிவாக்க மையத்தை நேரில் அணுகி, இந்த விதைகளையும் இடுபொருட்களையும் பெற்றுப் பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நாட்டுக் கோழி வளர்க்க விருப்பமா? மானியம் இருப்பது தெரியுமா?



கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி (NATTU KOZHI) வளர்ப்பில் திறமையும் ஆர்வமும் உள்ள தொழில் முனைவோரை கண்டறிந்து, அவர்களுக்கு கோழி பண்ணை நிறுவிட ஊக்கு க்கும் பொருட்டு, 2026-27ஆம் ஆண்டிற்கான (250 கோழிகள்/அலகு (UNIT) என 100 நாட்டுக்கோழி பண்ணை நிறுவ 50% மானியத்தில் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

**பயனாளிகள் தேர்வு எப்படி (BENFICIARY SELECTION)?**

1) இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பில் திறன் கொண்ட வராகவும் இருக்க வேண்டும்.

2) பயனாளிகள் அந்த கிராமத்தில் நிரந்திரமாக வசிப் பவராகவும் இருக்க வேண்டும்.

3) கோழி கொட்டை கட்ட சொந்தமாக குறைந்த பட்சமாக 625 சதுர அடி நிலம் இருத்தல் வேண்டும் (OWN LAND).

4) இந்த நிலமானது மனித குடியிறுப்பு ,நீர் நிலைகளின் அருகில் இருக்கக்கூடாது (விலகிய இருக்க வேண்டும்).

**யார் யார்? தகுதியான பயனாளிகள்?**

1) விதவைகள், ஆதரவற்றோர், திருநங்கைகள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2) தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் 30% தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் (S.C/ S.T).

3) அதுமட்டுமின்றி கடந்த 2023-24, 2024-25, 2025-26 ஆம் ஆண்டிகளில் கால்நடை பாரமரிப்பு துறையின் கீழ்

வழங்கப்பட்ட எந்த வித மானியம் பயன் அடைந்து இருக்க கூடாது. குறைந்த பட்சம் 3 வருடங்களுக்கு குறையாமல் கோழி பண்ணை முறையாக பராமரிக்க உறுதி அளித்திடல் வேண்டும்.

4) திட்டத்தின் மீதமுள்ள 50% பங்களிப்பை வங்கி மூலமாகவோ/ சொந்த நிதி ஆதாரங்கள் மூலமாகவோ திரட்டிட வேண்டும்.

**விண்ணப்பிக்க என்ன என்ன ஆவணங்கள் தேவை?**

1) ஆதார் அட்டை நகல்

2) பண்ணை அமைய இருக்கும் இடத்தின் பட்டா/ அடங்கல் நகல்

3) 50% தொகை அளிப்பதற்கான ஆவணங்கள்

4) மூன்று வருடங்கள் பண்ணை முறையாக பராமரிப் பதற்கான உறுதி மொழி.

உரிய ஆவணங்களுடன் வருகிற 25.9.26க்குள் அருகே உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

நாட்டுக்கோழியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. புறக்கடை கோழி வளர்ப்பை விட பண்ணை அமைத்து கோழி வளர்த்தால் கூடுதலான வருமானம் ஈட்டலாம். கிராமப்புறங்களும் வளம் பெறும். நகர்ப்புறத்தை நோக்கி செல்ல வேண்டிய அவசியமில்லை.

காந்தி கண்ட கனவு நனவாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# ஒலக்கூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

விழுப்புரம், செப்.21

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டத்தின் சார்பில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒலக்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆரோக்கியராஜ் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற இப்பயிற்சிக்கு துணை வேளாண்மை அலுவலர் சின்னத்துரை தலைமை தாங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசண்முகம் வரவேற்றார்.




பயிற்சியில் விழுப்புரம் மாவட்ட மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் ஜெரிகாட் மெர்சி கலந்து கொண்டு, மண் பரிசோதனையின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குதல், இயற்கை மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்துதல், இரசாயன உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

மேலும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறையை கடைப்பிடிப்பதன் மூலம் இரசாயன உரச் செலவைக் குறைத்து, மண் வளத்தை பாதுகாப்பதுடன், நிலையான முறையில் பயிர் மகசூலை அதிகரிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் ஆனந்தி, வேளாண் திட்டப் பணிகள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் மற்றும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சிட்டிபாபு நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சுதாகர், சுப்ரியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வீராசாமி ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# நிலையான வருமானம் பெற ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள் குறித்த கட்டண பயிற்சி

கள்ளக்குறிச்சி, செப்.21

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டாரம், காளசமுத்திரத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் வருகின்ற 23.09.26 புதன்கிழமை அன்று ஒருங் கிணைந்த பண்ணையம் குறித்த கட்டண பயிற்சி நடைபெற உள்ளது. இந்த பயிற்சியில் நிலத்துக்கேற்ற ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்தல் குறித்தும், பயிரோடு கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு முறைகள், கழிவுகளை இயற்கை இடுப்பொருட்களாக மாற்றும் முறைகள், வருமானத்தை உயர்த்துவதற்காக தேன் மற்றும் காளான் வளர்ப்பு தொழில்நுட்பங்கள், பல அடுக்கு காய்கறி மற்றும் பழப்பயிருடன் கோழி வளர்ப்பு, வேளாண் காடுடன் கூடிய ஆடு வளர்ப்பு குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்படும். மேலும்அரசு மானிய திட்டங்கள் வங்கி கடன் பெறும் வழிமுறைகள் குறித்து விரிவாக பயிற்சி அளிக்க உள்ளது.

பயிற்சியின் இறுதியில் விவசாயிகள் பயன்பெற சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். இந்த பயிற்சிக்கு கட்டணமாக ரூபாய் 590 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பேருந்து வழித்தடங்கள் சின்ன சேலம் முதல் கூகையூர் செல்லும் வழியில் குரால் நிறுத்தம் மற்றும் வீ கூட் ரோடு முதல் நைனார்பாளையம் செல்லும் வழியில் காளசமுத்திரம் நிறுத்தம். மேலும் விவரங்களுக்கு 96776 61410 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மொ.ச.கண்ணதாசன் தெரிவித்துள்ளார்.



# உலக தென்னை தின கொண்டாட்டம்

கோயம்புத்தூர், செப்.21

கோட்டுரில் 20-9-2026 அன்று விவசாயிகள் முன்னிலையில் உலக தென்னை தினம் கொண்டாடப்பட்டது. விழாவில் பல்கலைக்கழக செயல் துணை வேந்தர் முனைவர் ரவீந்திரன் சிறப்புரை ஆற்றினார்.



முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி விஜயகுமார் சிறப்புரையாற்றினார். முனைவர் கண்டியன்னன், முனைவர் அகஸ்டின் ஜெரால்டு, முனைவர் கார்த்திகேயன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் தரப்பட்டது.

பொள்ளாச்சி, உடுமலை பகுதி விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.



# அட்மா திட்டத்தின் கீழ் அங்கக வேளாண்மை / இயற்கை வேளாண்மை என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி



சேலம், செப்.21

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி தண்டனூர் கிராமத்தில் 21.09.26 அன்று நடைபெற்றது. மௌலிதரன், மண் மாதிரி பரிசோதனை, மண் நல மேலாண்மை, சமச்சீர் உரப்பயன்பாட்டு முறைகள், விவசாய அடையாள எண், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். ஞானஜோதி முருகன், துணை வேளாண்மை அலுவலர், நுண்ணுயிர் பாசன திட்டம், விதை பண்ணை அமைப்பதன் வரும் நன்மைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். விஜயகுமார், உதவி தோட்டக் கலை அலுவலர், வேளாண் மற்றும தோட்டக்கலை நலத் திட்டங்கள், பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் பயிற்சியாளர் பிரவீன், இயற்கை உரங்கள் பயன்படுத்துவதால் வரும் நன்மைகள், பஞ்சகாவ்யம், ஜீவாமிர்தம்,மீன் அமிலம், அமிர்த கரைசல் செய்யும் முறைகள் பற்றியும், மண் மாதிரி எடுக்கும் முறையை பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். ராஜ்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டத்தில் செயல் படுத்தும் பயிற்சி செயல்விளக்கம் கண்டுணர்வு சுற்றுலா பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா பணி யாளர் பிரியங்கா செய்திருந்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மைக்ரோகிரீன்ஸ் : குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் தரும் நவீன சாகுபடி

## மைக்ரோகிரீன்ஸ் என்றால் என்ன?

மைக்ரோகிரீன்ஸ் என்பது காய்கறி, தானியம் அல்லது கீரை வகை விதைகளிலிருந்து முளைத்து, 7 முதல் 14 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும் இளம் தாவரங்கள்ஆகும். இவை முளை கட்டிய விதைகளை (sprouts) விட வளர்ச்சியில் ஒருபடி மேலே சென்று, முதல் இரண்டு இலைகள் (cotyledon leaves) விரிந்த நிலையில் அறுவடை செய்யப்படுகின்றன. சாதாரண முளை கட்டிய விதைகளில் வேரும் விதையின் மேல் பகுதியும் சேர்த்தே சாப்பிடப் படும், ஆனால் மைக்ரோகிரீன்ஸில் தண்டும் இலையும் மட்டுமே அறுவடை செய்யப்பட்டு, வேர்மற்றும் வளரூட்டஊடகம் நீக்கப் படுகிறது. இது சுகாதாரத்தன்மை மற்றும் சேமிப்புத்தன்மையில் மைக்ரோகிரீன்ஸை சிறப்பானதாக ஆக்குகிறது.

நகரங்களில் ஆரோக்கிய உணவு மீதான ஆர்வம் அதிகரித்து வருவதால், ஓட்டல்கள், சாலட்பார்கள், மற்றும் ஆரோக்கிய உணவு விற்பனையாளர்களிடையே மைக்ரோகிரீன்ஸுக்கு தேவை வேகமாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக சென்னை, பெங்களூரு, ஹைதரா பாத், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் ஃபைன்-டைனிங் உணவகங்கள் தங்கள் உணவுகளை அலங்கரிக்கவும், சுவை கூட்டவும் மைக்ரோகிரீன்ஸை அதிகளவில் பயன்படுத்தி வரு கின்றன. இதுவெறும் அலங்காரப் பொருளாக மட்டுமல்லாமல், ஒரு முழுமையான ஊட்டச்சத்து மூலமாகவும் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

## ஊட்டச்சத்து மதிப்பும் நன்மைகளும்

முழுவளர்ச்சியடைந்த காய்கறிகளை விட மைக்ரோகிரீன்ஸில் வைட்டமின் C, வைட்டமின் K, மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் 4 முதல் 40 மடங்கு வரை அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன. உதாரணமாக, சிவப்பு முட்டைக்கோஸ் மைக்ரோகிரீன்ஸில் முழு வளர்ந்த செடியைவிடவைட்டமின் C அளவு கிட்டத்தட்ட ஆறு மடங்கு அதிகமாக இருக்கும் என்று பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இதேபோல, கொத்தமல்லி மைக்ரோகிரீன்ஸில் பீட்டாகரோட்டின் அளவும், மெதிமைக்ரோகிரீன்ஸில் இரும்புச் சத்தும் கணிசமாக அதிகமாக இருப்பதாக தெரிகிறது.

இவை எடை குறைப்பு, நீரிழிவு கட்டுப்பாடு, மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த உதவும் உணவுப் பொருளாக பரவலாக பரிந்துரைக்கப்படுகின்றன. மேலும், இவற்றில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் செரிமான மண்டலத்திற்கும் நல்லது. குறைந்த கலோரி கொண்ட இந்த உணவு, எடை கட்டுப்பாட்டில் இருப்பவர்களுக்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை பின்பற்ற விரும்புவர் களுக்கும் ஏற்றதாக அமைகிறது. இயற்கை உணவு விரும்பிகள் மற்றும் 'ராஃபுட்' (raw food) பாணியை பின்பற்றுபவர் களிடையேயும் மைக்ரோகிரீன்ஸுக்கு தனி வரவேற்பு உள்ளது.

### சாகுபடிக்கு தேவையான அடிப்படை பொருட்கள்

மைக்ரோகிரீன்ஸ் சாகுபடிக்கு பெரிய அளவிலான நிலமோ, விலையுயர்ந்த கருவிகளோ தேவையில்லை என்பதே இதன் மிகப்பெரிய கவர்ச்சி. ஒரு சிறிய பால்கனி, டெரஸ் அல்லது அறையின் ஒரு மூலை கூட இதற்குப் போதுமானது.

தட்டையான தட்டுகள் (10x10 அங்குலம் அல்லது 20x10 அங்குலட்ரே) துளையிட்ட மற்றும் துளையிடாத இரண்டு ட்ரேகள் தேவைப்படும், ஒன்று வளரூட்ட ஊடகத்திற்கும் மற்றொன்று தண்ணீர் தேங்காமல் இருக்க அடியில் வைப்பதற்கும்.

வளரூட்ட ஊடகம் காக்கோபீட், சாய்ல்லெஸ் மிக்ஸ் அல்லது சோயில் அடிப்படையிலான கலவை. காக்கோபீட் எடையில் குறைவாக இருப்பதாலும், ஈரப்பதத்தை நன்றாக தக்கவைப்பதாலும் ஆரம்பநிலை சாகுபடியாளர்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

### தரமான முளைப்புத்திறன் அதிகமுள்ள விதைகள்

மைக்ரோகிரீன்ஸுக்கென தனியாக விற்பனை செய்யப்படும் 'non-GMO' மற்றும் இரசாயனம் தீண்டாத விதைகளை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும்.

தெளிப்பான் (spray bottle) அல்லது மெல்லிய நீர்ப்பாசன அமைப்பு மிஸ்ட்ஸ்ப்ரேயர் அல்லது சிறிய watering can பயன் படுத்தலாம்.

மறைப்பதற்கான டிரே (blackout tray) அல்லது இருள் கவர் முதல் நாட்களில் வேர்பிடிக்க உதவும். வெளிச்சம் இயற்கை சூரிய வெளிச்சம் அல்லது ஸிசிம் கிரோலைட். வீட்டு உள்ளே சாகுபடி செய்பவர்களுக்கு குறைந்த மின்நுகர்வுள்ள ஸிசிம் கிரோலைட்கள் இன்று சந்தையில் மலிவு விலையில் கிடைக்கின்றன.

pH மீட்டர் அல்லது சோதனைகருவி (விருப்பத்திற்கு உகந்தது) ஊடகத்தின் pH அளவை சரி பார்க்க உதவும்.

**பயிரிடத் தகுந்த முக்கிய விதைகள்**

***தமிழக காலநிலைக்கு ஏற்றதாகவும், வேகமாக விளையக் கூடியதாகவும் உள்ள சில வகைகள் :***

**கடுகு (Mustard)** வேகமாக முளைத்து, காரமான சுவை. இது 5–7 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும்.

**வெண்டை/மூலிகை வகை கீரைகள்** கொத்தமல்லி, மெதி (Fenugreek). கொத்தமல்லி மைக்ரோகிரீன்ஸ் சற்று மெதுவாக வளரும் என்றாலும், அதன் நறுமணம் காரணமாக உணவகங்களில் அதிக தேவை உள்ளது.

**பாசிபயறு (Green gram/Moong)** புரதச்சத்து அதிகம் கொண்டது, சாலட்களில் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

**முள்ளங்கி (Radish)** சிவப்பு நிற தண்டுடன் கவர்ச்சிகரமான தோற்றம். இதன் காரமான சுவை பலரையும் ஈர்க்கிறது. மேலும் இது 6–8 நாட்களில் அறுவடைக்கு தயாராகும்.

**சூரியகாந்தி (Sunflower)** கொஞ்சம் தாமதமாக விளைந்தாலும் (9–12 நாட்கள்) நல்ல சந்தை மதிப்பு. கொட்டைப் போன்ற நறுமணமும் நல்ல கடினத்தன்மையும் கொண்டதால் சாண்ட்விச்களில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

**கோதுமைப்புல் (Wheatgrass)** ஜூஸ் தயாரிப்புக்கு பிரத்யேக தேவை. இது மைக்ரோகிரீன்ஸ் என்பதைவிட ஒரு தனித்துவமான வகைஎ ன்றாலும் இதே முறையில் விளைவிக்கப்படுகிறது.

**பீட்ரூட் மைக்ரோகிரீன்ஸ்** அழகிய இளஞ்சிவப்பு நிற தண்டுகளால் உணவு அலங்காரத்திற்கு பிரபலம்.

**முட்டைக்கோஸ் மற்றும் ப்ராக்கோலி மைக்ரோகிரீன்ஸ்** சர்வதேச சந்தையில்அதிகதேவையுள்ளவகைகள், இவற்றின் விதை விலை சற்று அதிகமாக இருந்தாலும் நல்ல லாபம் தரக் கூடியவை.

புதிதாக தொடங்குபவர்கள் கடுகு, முள்ளங்கி போன்ற வேகமாக விளையும் வகைகளிலிருந்து தொடங்கி, படிப்படியாக பல்வேறு வகைகளுக்கு விரிவாக்கம் செய்வது நல்லது.

**சாகுபடிமுறை – படிப்படியான வழிகாட்டி**

**விதை தயாரிப்பு :** விதைகளை 6–8 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும் (கடுகு, முள்ளங்கி போன்ற சிறு விதைகளுக்கு ஊறவைக்க வேண்டிய அவசியம் இல்லை). ஊற வைக்கும் போது, மிதக்கும் பழுதடைந்த விதைகளை நீக்கிவிடவும். இது முளைப்பு விகிதத்தை மேம்படுத்தும்.

**ட்ரே தயாரிப்பு :** ட்ரேயில் 1-1.5 அங்குல தடிமனாக ஈரப்பதமான ஊடகத்தை சமமாக பரப்பவும். ஊடகத்தை மிக இறுக்கமாக அழுத்தாமல், லேசாக சமன் செய்ய வேண்டும்.

**விதைப்பு :** விதைகளை அடர்த்தியாக, ஒன்றன் மேல் ஒன்று படாமல் சீராக தூவவும். ஒரு 10x10 அங்குல ட்ரேக்கு பொதுவாக 15-20 கிராம் விதை தேவைப்படும் (விதை வகையைப் பொறுத்து மாறுபடும்).

**மூடி வைத்தல் :** முதல் 2-3 நாட்களுக்கு இருள் கவர் அல்லது இன்னொரு ட்ரேயை தலைகீழாக வைத்து மூடி, வேர்பிடிக்க உதவவும். இந்த கட்டத்தில் லேசான எடையை (வேறொரு ட்ரே




அல்லது புத்தகம் போன்றவை) மேலே வைப்பது வேரூன்றலை மேம்படுத்தும். இதை 'blackout weighting' எனலாம்.

**வெளிச்சத்திற்கு மாற்றுதல் :** முளை வெளி வந்ததும் மூடியை அகற்றி, நேரடி வெளிச்சத்திற்கு கொண்டு வரவும். திடீரென பிரகாசமான வெளிச்சத்திற்கு மாற்றாமல், படிப்படியாக பழக்கப் படுத்துவது நல்லது.

**நீர்ப்பாசனம் :** தினமும் காலை/மாலை இருவேளை மென்மை யாக தெளிக்கவும்; தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவும். வெப்பநிலை அதிகமாக இருக்கும் கோடைக் காலங்களில் மூன்று வேளை தெளிப்பது தேவைப்படலாம்.

**அறுவடை :** முதல் இலைகள் முழுமையாக விரிந்ததும் (பொதுவாக 7–14 நாட்களில்), கத்தரிக்கோல் மூலம் தண்டு அடியில் வெட்டி அறுவடை செய்யவும். அறுவடைக்கு முன் கடைசி நாள் தண்ணீர் தெளிக்காமல் இருந்தால், அறுவடை செய்த மைக்ரோ கிரீன்ஸ் அதிக நாட்கள் புத்தம் புதிதாக இருக்கும்.

**பராமரிப்பில் கவனிக்க வேண்டியவை**

அதிகப்படியான நீர் பூஞ்சைசே நாய்க்கு (damping-off) வழி வகுக்கும்; ஈரப்பதத்தை சீராக கட்டுப்படுத்த வேண்டும். ஊடகம் எப்போதும் ஈரமாக இருக்க வேண்டுமே தவிர, தண்ணீரில் மிதக்கும் அளவுக்கு இருக்கக்கூடாது.

நல்ல காற்றோட்டம் இருக்க வேண்டும் அடர்த்தியான, மூச்சுத் திணறல் சூழல் நோய்த் தொற்றை அதிகரிக்கும். வீட்டு உள்ளே சாகுபடி செய்பவர்கள் ஒரு சிறிய மேசை மின்விசிறியை பயன் படுத்தி காற்றோட்டத்தை மேம்படுத்தலாம்.

வெப்பநிலை 20–25ஏளீ இடையே இருப்பது சிறந்த வளர்ச்சிக்கு உதவும். தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கோடைக் காலத்தில் வெப்பநிலை இதைவிட அதிகமாக இருக்கக்கூடும் எ ன்ப தால், நிழல்வலை (shade net) பயன்படுத்துவது நல்லது.

இரசாயன உரம் அல்லது பூச்சிக்கொல்லி பயன்படுத்தாமல் இருப்பதே மைக்ரோகிரீன்ஸின் முக்கியதரம். இதுவே இதை 'ஆர்கானிக்' மற்றும் ஆரோக்கியமான உணவாக அங்கீகரிக்க வைக்கிறது.

ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகும் ட்ரேகளை நன்றாக சுத்தம் செய்து, சூரிய ஒளியில் காய வைப்பது அடுத்த சுற்றில் நோய்த் தொற்றைத் தடுக்க உதவும்.

நாளை தொடரும்...

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**